# தலைப்பு 215 - தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களம் - 2024

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தலைப்பு 215 - தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களத்தின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுக்கு உரிய தகவல்களையும் உள்ளடக்கி நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்களுடன் கூடிய 2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2025 மே 28 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் திணைக்களத்திற்குரிய விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2025 மே 27 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து, 2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்களில், நிதி நிலைமை, நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல், நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்பு 1 இல் குறிப்பிடப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கான அடிப்படைக்கு இணங்க அனைத்து பொருண்மையானவை தொடர்பிலும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 விடயமொன்றை வலியுறுத்தல் - நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கான அடிப்படை

இந்த நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் அடிப்படையை விபரிக்கும் நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்பு 1 தொடர்பில் கவனம் செலுத்துமாறு கோருகின்றேன். நிதிக்கூற்றுக்கள் அரசின் நிதிப்பிரமாணம் 150 மற்றும் 151 மற்றும் 2025 பெப்ரவரி 21 ஆந் திகதி திருத்தப்பட்ட 2024 திசெம்பர் 16 ஆந் திகதிய அரச கணக்குகள் வழிகாட்டி இலக்கம் 06/2024 இன் பிரகாரம் தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களத்தினதும், பொதுத் திறைசேரியினதும்

மற்றும் பாராளுமன்றத்தினதும் தேவைப்பாட்டுக்காக தயாரிக்கப்பட்டுள்ளது. அதனால், இந்த நிதிக்கூற்றுக்கள் வேறு நோக்கங்களுக்கு பொருத்தமற்றதாக இருக்கக்கூடும். எனது அறிக்கை தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களத்தினதும், பொதுத் திறைசேரியினதும் மற்றும் இலங்கை பாராளுமன்றத்தினதும் பயன்பாட்டினை மாத்திரம் நோக்கமாக கொண்டுள்ளது. இந்த விடயம் தொடர்பில் எனது அபிப்பிராயத்தில் எந்த மாற்றமும் ஏற்படாது.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும், கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

அரசின் நிதிப்பிரமாணம் 150 மற்றும் 151 மற்றும் 2025 பெப்ரவரி 21 ஆந் திகதி திருத்தப்பட்ட 2024 திசெம்பர் 16 ஆந் திகதிய அரச கணக்குகள் வழிகாட்டி இலக்கம் 06/2024 இன் பிரகாரம் அனைத்து பொருண்மையானவை தொடர்பிலும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று அற்ற நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் திணைக்களத்தால் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்று தயாரிக்கப்பட்டு பேணிச் செல்லப்படுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுறுதிப்படுத்த வேண்டியதுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று மேற்கொள்ளப்பட்டு அதற்கமைய அம்முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

## 1.5 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றை பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்ககூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் எடுக்கப்படும் பொருளாதார தீர்மானங்கள் மீதான தாக்கத்தின் அடிப்படையில் தங்கியிருக்கும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக என்னால் கணக்காய்வின் போது துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறைசார் பின்னணியுடன் செயற்படுத்தப்பட்டது. என்னால் மேலும்,

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கு அடிப்படையொன்றை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று உருவாகும் ஆபத்தினை இனங்காணுதல் மற்றும் மதிப்பீட்டு செய்தல் என்பவற்றிற்காக சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு

நடைமுறைகளை திட்டமிடப்பட்டு செயற்படுத்தப்பட்டன. தவறுதலாக காண்பிப்பதன் காரணமாக இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கத்தினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல், தவறாக காண்பித்தல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் போன்ற காரணங்களால் ஆகும்.

- உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிக்கும் எண்ணத்தில் அல்லாமல் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பாக தெளிவொன்று பெற்றுக் கொள்ளப்பட்டது.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலும் மதிப்பீடு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு தெரியப்படுத்தியுள்ளேன்.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 நிதிக்கூற்றுக்கள் சுற்றறிக்கை ஏற்பாடுகளுடன் இணங்காமை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| 2024 திசெம்பர் 16 ஆந் திகதிய இலக்கம் 06/2024 என்ற அரச கணக்குகள் வழிகாட்டியின் 8.2 ஆம் பிரிவின் பிரகாரம் அறிக்கையிடப்பட வேண்டிய நிதியல்லாச் சொத்துக்கள் காணப்படுமாயின் அவை உரிய பிரகாரம் இனங்கண்டு கிரயத்திற்கு அல்லது கிரயத்தில் இனங்காண முடியாத சந்தர்ப்பத்தின் போது மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதியில் கணக்கீடு செய்ய வேண்டிய போதிலும் கணக்காய்விற்கு வழங்கப்பட்டுள்ள தகவல்களின் படி 07 தொழில்நுட்பவியல் கல்லூரிகள் மற்றும் 23 தொழில்நுட்பக் கல்லூரிகளுக்கு மாணவர்களின் | மாணவர்களின் கல்விசார் நடவடிக்கைகளுக்காக ஈடுபடுத்துகின்ற பயிற்சி உபகரணங்கள் மற்றும் பயிற்சி நடவடிக்கைகளுக்காக நன்கொடையாக கிடைக்கப் பெற்ற வாகன விடயங்களும் நிதியல்லாச் சொத்துக்களின் கீழ் இது வரை எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் அறிக்கையிடப் படவில்லை. பயிற்சிப் பொருட்களாக அல்லாமல் ஏனைய முறையில் கிடைக்கின்ற நன்கொடைகள் காணப்படுமாயின் பொருள் மெய்மையாய்வின் மூலம் உறுதிப்படுத்திய பின்னர் மதிப்பீடு செய்து கணக்கீடு | சுற்றறிக்கையின் பிரகாரம் நிதியல்லாச் சொத்துக்கள் உரிய பிரகாரம் இனங்கண்டு கணக்கீடு செய்யப்படல் வேண்டும். |

| | |
|---|---|
| கற்கை நடவடிக்கைகளுக்காக ஈடுபடுத்துவதற்காக வெளிநாட்டு கடன் செயற்திட்டம் மற்றும் நிறுவனங்களில் நன்கொடையாக சில வருட காலம் முதல் கிடைக்கப் பெற்ற 329 வாகன விடயங்களின் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டு நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

### 1.6.2 கணக்கீடுக் குறைபாடு

**(அ) ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| மீளாய்வாண்டின் போது ரூபா 3.196 மில்லியன் பெறுமதி உடைய மீண்டெழும் தன்மை உள்ள போக்குவரத்து உபகரணங்கள் மற்றும வாகன செலவினம் (9152) 2003 இன் மூலதன செலவின விடயத்தின் கீழ் மூலதன செலவினம் ஒன்றாகக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | உபகரணங்கள் மற்றும் வகன செலவினங்கள் மீண்டெழும் தன்மையிலா அல்லது மூலதன தன்மையிலா என்பது தொடர்பாக பராமரிப்பு பொறியியலாளரால் தீர்மானிக்கப்படுவதுடன் அதன் பிரகாரம் அந்த செலவினம் கணக்குப் பிரிவினால் கணக்கீடு செய்யப்படுகிறது. | மூலதன செலவினங்கள் சரியாக இனங்கண்டு கணக்கீடு செய்யப்படல் வேண்டும். |

**(ஆ) ஆவணங்கள் மற்றும் பதிவேடுகள் பேணிச் செல்லப்படாமை**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (i) | ஒதுக்கீட்டு (அங்கீகரிக்கப்பட்ட செலவினம்) (பேரேடு) நிதிப்பிரமாணம் 447 இன் பிரகாரம் திணைக்கள ஒதுக்கீட்டுப் பேரேடு நாளது வரையாகப் பேணிச் செல்லப்பட்டிருக்கவில்லை. | நாளது வரையாக பேணிச் செல்வதற்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | ஒதுக்கீடு (அங்கீகரிக்கப்பட்ட செலவினம்) பேரேடு நாளது வரையாக பேணிச் செல்லப்படல் வேண்டும். |
| (ii) | இழப்பு பதிவேடு நிதிப் பிரமாணம் 110 இன் பிரகாரம் இழப்பு தொடர்பான பதிவேடு நாளது வரையாகப் பேணிச் செல்லப்பட்டிருக்க வில்லை. | நாளது வரையாக பேணிச் செல்வதற்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | இழப்பு நட்ட பதிவேடு நாளது வரையாக பேணிச் செல்லப்படல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| (iii) | வாகன சம்பவத் திரட்டு புத்தகம்<br>நிதிப்பிரமானம் 1645 (அ) இன் மேற்படி பிரகாரம் 17 வாகன சம்பவத் திரட்டுப் புத்தகங்கள் நாளது வரையாக பேணிச் செல்லப்பட்டிருக்கவில்லை. | வாகன சம்பவத் திரட்டு புத்தகங்கள் நாளது வரையாக பேணிச் செல்லப்படல் வேண்டும். |

## 2. ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்களுடன் நேரொத்ததாக உள்ளது எனவும்,

(ஆ) முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் வழங்கப்பட்ட பின்வரும் பரிந்துரைகள் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

| முன்னைய ஆண்டிற்குரிய அறிக்கையின் பந்தியுடனான தொடர்பு | அமுல்படுத்தப்படாது இருந்த பரிந்துரைகள் | இந்த அறிக்கையின் பந்தியின் தொடர்பு |
|---|---|---|
| 1.6.1 (அ) | 2023 நவம்பர் 30 ஆந் திகதிய இலக்கம் 05/2023 என்ற அரச கணக்குகள் வழிகாட்டியின் 8.2 ஆம் பிரிவின் படி தொழில்நுட்பவியல் கல்லூரிகள் மற்றும் தொழில்நுட்பக் கல்லூரிகளுக்கு மாணவர்களின் கல்விசார் நடவடிக்கைகளுக்காக வெளிநாட்டுக் கடன் செயற் திட்டம் மற்றும் உள்நாட்டு நிறுவனங்களில் இருந்து நன்கொடையாகக் கிடைக்கப் பட்ட வாகனங்களின் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டு நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்குதல் வேண்டும். | 1.6.1 (அ) |

## 3. நிதி மீளாய்வு

### 3.1 செலவின முகாமைத்துவம்

வருடாந்த பாதீட்டு மதிப்பீடு தயாரித்தல், நிதியேற்பாடை மற்றுதல், நிதியேற்பாட்டைப் பயன்படுத்தல் மற்றும் சேமிப்பு தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | செலவினங்கள் சரியான முகாமைத்துவம் மற்றும் தேவையற்ற செலவினங்களை பதிவளித்தலாக காரணங்கள் கூறி 10 செலவின விடயங்களின் நிதியேற்பாடுகளின் கூட்டு மொத்தம் ரூபா 46.275 மில்லியன் சேமிக்கப்பட்டிருந்ததுடன் அந்த நிதியேற்பாட்டின் அளவு அங்கீகரிக்கப்பட்ட நிதியேற்பாடுகளில் 51 சதவீதத்திற்கும் 76 சதவீதத்திற்கும் இடையில் காணப்பட்டது. | எதிர்பார்க்கப்பட்ட பிரகாரம் செலவினங்கள் ஏற்படவில்லை. | உரிய எதிர்வுகூறல் மற்றும் பொருத்தமான அடிப்படையில் மதிப்பீடு தயாரிக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | நிதிப் பிரமாணம் 50 இன் பிரகாரம் மீளளிப்புச் செய்யக் கூடிய சகல சேவைகளும் மதிப்பீடுகள் உள்ளடக்கப்பட்டமைக்கும் அவை நிதியேட்டில் தமது திணைக்களத்தால் நிறைவேற்றக் கூடிய சக்தி உள்ளமை கருதி மதிப்பீடு தயாரிக்க வேண்டியிருந்த போதிலும் அவ்வாறு செய்யாமையின் காரணமாக நிகழ்ச்சித் திட்டம் 01 மற்றும் 02 இன் கீழ் 14 செலவின விடயங்களில் ரூபா 9.462 மில்லியன் வீரமன் நடைமுறை (நிதிப்பிரமாணம் 66/69) பின்பற்றி மாற்றப்பட்டு இருந்ததுடன் அவ்வாறு நிதியேற்பாடு மாற்றப்படாது இருக்குமாயின் வருடாந்தம் பாதீடு செய்யப்பட்ட நிதியேற்பாட்டுடன் ஒப்பீடு செய்யும் போது அந்த செலவின விடயங்களின் நிதியேற்பாடு சேமிப்பு 21 சதவீதத்திற்கும் 100 சதவீதத்திற்கும் இடையிலான வீச்சில் காணப்பட்டது. அவ்வாறு வீரமன் நடைமுறை பின்பற்றி நிகழ்ச்சித் திட்டம் 01 மற்றும் 02 இன் கீழ் 10 செலவின விடயங்களுக்கு உரிய ரூபா 55.222 மில்லியன் மாற்றப்பட்டதுடன் இந்த மாற்றப்பட்ட நிதியேற்பாடு வருடாந்த மதிப்பீடு செய்யப்பட்ட நிதியேற்பாட்டுடன் ஒப்பீடு செய்யும் போது 15 சதவீதத்திற்கும் 68 | சேமிக்கப்பட்ட நிதியேற்பாடு குறைவான செலவின விடயங்களுக்கு மாற்றப்பட்டதுடன் சில செலவின விடயங்களுக்கு உரிய அத்தியாவசிய செலவினங்களை செய்வதற்காக நிதியேற்பாடு போதியளவில் காணப்படாமையின் காரணமாக நிதிப்பிரமாணம் 66 இன் கீழ் நிதியேற்பாடு வழங்கப்பட்டிருந்தது. | மேற்படி |

| | | | |
|---|---|---|---|
| | சதவீதத்திற்கும் இடையிலான வீச்சில் காணப்பட்டது. | | |
| (இ) | மீளாய்வாண்டில் உள்நாட்டு பிரயாணச் செலவின விடயத்திற்காக நிகழ்ச்சித் திட்டம் 01, நிகழ்ச்சித் திட்டம் 2 - 2, நிகழ்ச்சித் திட்டம் 2 - 3 இன் கீழ் நிதியேற்பாடுகளின் சேமிப்பு முறையே 21 சதவீதம், 26 சதவீதம் மற்றும் 32 சதவீதப் படி இருந்ததுடன் அதன் காரணமாக இணைய வழி ஊடாக கூட்டங்களை நடாத்தியமையினால் எதிர்பார்க்கப்பட்ட பிரகாரம் செலவினங்கள் ஏற்படாமை காண்பிக்கப்பட்டிருந்தது. எனினும் 01/2023 மற்றும் இலக்கம் 01/2024 தேசிய வரவு செலவுத் திட்ட சுற்றறிக்கையின் மூலம் இணைய வழி முறைமையும் இயலுமான வரை பயன்படுத்தி கூட்டங்களை நடாத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை தொடர்ச்சியாகக் காண்பிக்கப்பட்ட போதிலும் அது தொடர்பாக கவனத்தில் கொள்ளாமல் நிதியேற்பாடு ஒதுக்கப்பட்டிருந்தது. | இணைய வழி ஊடாக கூட்டங்களை நடாத்தியமையினால் எதிர்பார்க்கப்பட்ட பிரகாரம் செலவினங்கள் ஏற்படவில்லை. | தேசிய வரவு செலவுத் திட்ட சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | மீளாய்வாண்டின் நிகழ்ச்சித் திட்டம் 1 மற்றும் 2 இன் கீழ் 08 செலவின விடயங்களுக்காக மொத்த தேறிய நிதியேற்பாடு ரூபா 134.2 மில்லியன் ஒதுக்கப்பட்டிருந்ததுடன் அதன் சேமிப்பு ரூபா 46.656 மில்லியன் ஆகும். மொத்த தேறிய நிதியேற்பாட்டின் வீதமாக சேமிப்பு 13 சதவீதம் முதல் 61 சதவீதம் வரையிலான வீச்சில் காணப்பட்டதுடன் சேமிப்பிற்கான காரணமாக எதிர்பார்க்கப்பட்ட பிரகாரம் சிட்டைகள் சமர்ப்பிக்கப்படாமையினால் நிதியேற்பாடு சேமிக்கப்பட்டதாக காண்பிக்கப்பட்டிருந்தது. எனினும் நிதிப்பிரமானம் 217 இல் காண்பிக்கப்பட்ட படி எந்த ஒரு நிதியாண்டின் போதும் செலுத்துவதற்கு குறித்துரைத்த நிதி யாவும் இயலுமான வரை அந்த ஆண்டின் இறுதிக்கு முன் செலுத்தி தீர்க்கப்பட வேண்டிய தேவை | எதிர்பார்க்கப்பட்ட பிரகாரம் சிடடைகள் சமர்ப்பிக்காமையில் நிதியேற்பாடு சேமிக்கப்பட்டுள்ளது. | சரியான எதிர்வு கூறல் மற்றும் பொருத்தமான அடிப்படையில் மதிப்பீடு தயாரிக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | தொடர்பாக கவனத்தில் கொள்ள வேண்டி இருந்ததுடன் அவ்வாறு செய்வதற்கு நடவடிக்கை எடுக்காமையின் காரணமாக மேற்குறிப்பிடப்பட்ட பயன்பாட்டு சேவைகளுக்காக ஒதுக்கப்பட்ட நிதியேற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. | | |
| (உ) | அங்கீகரிக்கப்பட்ட பெறுகை திட்டத்தின் பிரகாரம் வருடாந்த நிதியேற்பாடு பெற்று பெறுகை நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டியிருந்த போதிலும் அவ்வாறு நடவடிக்கைகள் எடுக்காமையின் காரணமாக நிகழ்ச்சித் திட்டம் 1 மற்றும் 2 இன் 04 செலவின விடயங்களில் மூலதன சொத்துக்கள் கைப்பற்றலின் கீழ் மேற்கொள்ளப்பட்ட ரூபா 22 மில்லியன் பாதீட்டு நிதியேற்பாடுகளில் ரூபா 11.1 மில்லியன் சேமிக்கப்பட்டிருந்தது. அது மதிப்பீடு செய்யப்பட்ட நிதியேற்பாட்டின் சதவீதமாக எடுப்போமாயின் 30 சதவீதத்திற்கும் 58 சதவீதத்திற்கும் இடையிலான வீச்சில் காணப்பட்டது. | முன்னுரிமையின் பிரகாரம் அத்தியாவசிய புதிய கொள்வனவுகள் மாத்திரம் மேற்கொள்ளப்பட்டதன் காரணமாக நிதியேற்பாடு சேமிக்கப்பட்டுள்ளது. | பெறுகைத் திட்டத்தின் பிரகாரம் நிதியேற்பாடு ஒதுக்கிக் கொள்வதற்கும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதற்கும் கவனம் செலுத்துதல் வேண்டும். |

**3.2 பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளுக்கு உட்படல்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| மீளாய்வாண்டின் கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள் மீதிகளுக்கு இடையிலும் மற்றும் திறைசேரி கணனி அச்சிடல் (SA 92) 39 செலவின விடயங்களுக்கு உரிய மீதிகளுக்கும் இடையே ரூபா 18.25 மில்லியன் வேறுபாடு காணப்பட்டது. | விடய எழுதுவினைஞரின் தவறின் காரணமாக சில பொறுப்புக்கள் தொடர்பாக சிகாஸ் இணைய உட்படுத்தல் மற்றும் சில பொறுப்புக்கள் பதிவேடு நாளது வரையாக்கப்படவில்லை. | பதிவேடுகளுக்கு இடையே வேறுபாடுகள் ஏற்படாது வகையில் நடவடிக்கை எடுக்க வேண்டி இருந்ததுடன் சரியாக கணக்கு வைத்தலும் மேற்கொள்ளப்படல் வேண்டும். |

### 3.3 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|---|
| (i) | இலங்கை சனநாய சோசலிச குடியரசின் நிதிப்பிரமாணக் கோவையின் 756 (6) (1) ஆம் பிரிவு | பொருள் மெய்மையாய்வு சபை நியமித்தல் உரிய நிதி ஆண்டின் திசெம்பர் 15 ஆந் திகதிக்கு முன்னர் மேற்கொள்ள வேண்டியிருந்த போதிலும் தொழில் நுட்பக் கல்வி மற்றும் பயிற்சி திணைக்களத்தின் 2024 ஆம் ஆண்டிற்காக மற்றும் திணைக்களத்தின் கீழ் உள்ள 07 தொழில்நுட்பவியல் கல்லூரிகள் மற்றும் தொழில்நுட்ப கல்லூரிகள் மற்றும் பிரதான அலுவலகத்தில் 2023 மற்றும் 2024 ஆம் ஆண்டுக்குரிய பொருள் மெய்மையாய்வு சபை நியமிக்கும் நடவடிக்கைகள் குறித்துரைத்த திகதியில் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் மெய்மையாய்வு சபை தாமதம் இன்றி பரிந்துரையினைப் பெற்று அவ்வாறு செய்வதற்கும் அதன் பிரகாரம் அங்கீகாரம் குறித்துரைத்த ரீதியில் குறித்துரைத்த திகதிக்கு முன் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் பொருள் மெய்மையாய்வு சபை குறித்துரைத்த திகதிக்கு முன் நியமிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ii) | 2016 திசெம்பர் 29 ஆம் திகதி இலக்கம் 30/2016 என்ற பொது நிர்வாக சுற்றறிக்கையின் 3.1 ஆம் பந்தி | சகல எரிபொருள் பரிசோதனையின் பின்னர் 12 மாத கால எல்லையின் பின்னர் அல்லது கிலோமீற்றர் 25,000 தூரம் ஓடியதன் பின்னர் அல்லது எஞ்சின் தொடர்பாக பிரதான பழுதுபார்த்தல் மேற்கொள்ளப்பட்ட பின்னர் அல்லது இந்த காரணங்களுக்கு இடையே முதலில் ஏற்படுகின்ற | திணைக்களத்தின் சகல வாகனங்களுக்காகவும் எரிபொருள் பரிசோதனை மேற்கொண்டு 12 மாதங்களின் பின்னர் மீண்டும் எரிபொருள் எரிவுப் பரிசோதனை மேற்கொள்ளுதல் வசதியீனம் மற்றும் நடைமுறையில் சாத்தியமில்லாத அதிக எரிபொருள் | வாகனங்களுக்காக எரிபொருள் எரிவுப் பரிசோதனை கால ரீதியில் அல்லது தூர அளவின் அடிப்படையில் மேற்கொள்ளப்படல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| | சந்தர்ப்பத்தின் பின்னர் மீண்டும் எரிபொருள் பரிசோதனை மேற்கொள்ள வேண்டியிருந்த போதிலும் நிறுவனத்திற்கு சொந்தமான 72 வாகனங்கள் தொடர்பாக 2022 ஆம் ஆண்டு முதல் எரிபொருள் எரிவு பரிசோதனை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | கிரயம் ஒன்றை செய்வதற்கு ஏற்படுகின்றமையால் வாகனங்கள் தொகுதிகளாக்கப்பட்டு அந்த தொகுதிகளில் வாகனங்கள் வீதம் எழுமாறாக தெரிவு செய்யப்பட்டு எரிபொருள் பரிசோதனை மேற்கொண்டு அந்த எண்ணிக்கையில் வாகன தொகுதியின் ஏனைய வாகனங்களுக்காக அமுல்படும் வகையில் பரிந்துரை வழங்கப்பட்டு இருந்தது. |

## 3.4 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

### அதிகார பலம் இன்றிய கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| திருத்தப்பட்ட நிதிப்பிரமாணம் 124(2) (அ) மற்றும் (ஆ) இன் பிரகாரம் திறைசேரியின் ஏற்பாடுகளின் கீழ் திணைக்கள நிதி நடவடிக்கைகளை மேற்பார்வை செய்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் ஆன அமைச்சின் செயலாளருக்கு உரிய பொறுப்பாக இருந்ததுடன் இலக்கம் 23/0256/604/030 என்ற அமைச்சரவைத் தீர்மானத்தின் படி அந்த குழுவின் பரிந்துரையை அமுல்படுத்துவதற்காக அமைச்சின் செயலாளரால் தேசிய பெறுகைகள் பணிப்பாளர் நாயகத்துடன் கலந்துரையாடி குறுகிய கால மற்றும் நடுத்தர மற்றும் நீண்ட காலத் திட்டம் தயாரித்து அந்த பரிந்துரை அமுல்படுத்துதல் வேண்டும். எனினம் அதற்கு முரணாக தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களத்திற்கு | இலக்கம் 04/2023 என்ற தேசிய வரவு செலவு திட்ட சுற்றறிக்கை மற்றும் 2023/23/0256/604/30 என்ற அமைச்சரவை தீர்மானத்தின் அதிகாரத்தின் பிரகாரம் தனியார் நிறுவனம் ஒன்றுடன் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டுள்ளது. | அமைச்சு செயலாளரின் அங்கீகாரம் பெற வேண்டி இருந்ததுடன் இந்த புரிந்துணர்வு உடன்படிக்கை தொடர்பாக பொதுத் திறைசேரிக்கு அறிவித்து ஆலோசனை பெறப்படல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| உரிய தொழில்நுட்ப தொழில் பயிற்சி நிறுவனங்கள் (TITP) கட்டிடத்தின் மூன்றாவது மாடி திணைக்கள பணிப்பாளர் நாயகத்தின் அங்கீகாரத்தின் அடிப்படையில் தனியார் கம்பனி ஒன்றுக்கு 15 வருட காலத்திற்கு புரிந்துணர்வு உடன்படிக்கையின் அடிப்படையில் 2023 ஒக்தோபர் 19 ஆம் திகதி முதல் வாடகைக்கு வழங்கப்பட்டதுடன் அதற்காக வரிசை அமைச்சின் செயலாளரின் அங்கீகாரத்தை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | |

**3.5 முற்பணம் வழங்கல் மற்றும் தீர்த்து வைத்தல்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| 2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதியில் இலக்கம் 01/2020 என்ற அரச நிதி சுற்றறிக்கையின் 9.1 ஆம் பிரிவில் திருத்தப்பட்ட நிதிப்பிரமாணம் 371 (2) (ஆ) இன் பிரகாரம் செயல் நிமித்த உப கட்டுநிதியைப் பெற்ற பதவி நிலை உத்தியோகத்தரால் அந்த பணிகள் நிறைவு பெற்ற உடன் அந்த செயல் நிமித்த உபகட்டுநிதி தீர்க்கப்பட வேண்டியிருந்த போதிலும் திணைக்களம் மற்றும் KOICA செயற்திட்டத்தின் மூலம் 54 சந்தர்ப்பங்களின் போது வழங்கப்பட்ட கூட்டுமொத்தமான ரூபா 3.18 மில்லியன் பெறுமதியான செயல் நிமித்த உபகட்டு நிதியை தீர்த்து வைப்பதற்காக 12 நாட்களுக்கும் 104 நாட்களுக்கும் இடையிலான காலம் எடுத்திருந்தது. | தற்போதைய சந்தை நிலைமையின் காரணத்தினால் கட்டுநிதி பெற்றவர்கள் உரிய பொருட்கள் மற்றும் துணைப் பாகங்களை கொள்வனவு செய்து பூர்த்தி செய்வதற்கு நடைமுறையில் முடியாது இருந்தது. அதனால் அதற்காக ஏதாவது மேலதிக காலம் எடுக்கின்றமையினால் அவ்வாறு உரிய பிரகாரம் பெற்றுக் கொள்ளப்பட்ட பின்னர் உரிய கட்டுநிதியை மீண்டும் தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் இது தொழில்நுட்ப செயற்பாடுகளில் ஏற்படுகின்ற கட்டாய நிலைமையாக உள்ளது. | பணிகள் நிறைவு பெற்ற உடன் செயல் நிமித்த உபகட்டு நிதியை தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 நட்டங்கள் மற்றும் இழப்புக்கள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்ட ரூபா 2.28 மில்லியன் பெறுமதியான 08 நட்ட விடயங்கள் அந்த நட்ட இழப்புக்கள் ஏற்பட்டு கணக்காய்வுத் திகதி வரையில் 07 – 14 வருடங்களுக்கு இடையிலான காலம் கடந்திருந்த போதிலும் அந்த நட்டங்களை அறவிடுவதற்கோ அல்லது புத்தகங்களில் இருந்து பதிவளிப்பதற்கோ நடவடிக்கை எடுக்காமல் பல வருட காலமாக முன்கொண்டு வரப்படுகின்ற மீதியாகக் காணப்பட்டது. | நட்டங்களை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | நட்ட இழப்பை அறவிடுவதற்கோ அல்லது அறவிட முடியாது இருக்குமாயின் உரிய நடவடிக்கைகளை பின்பற்றி புத்தகங்களில் பதிவளிப்பதற்கோ நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப்பிரமாணம் 104(3) இன் பிரகாரம் முழுமையான அறிக்கை சமர்ப்பிப்பதற்கு ஏழு நாட்களுக்கு மேற்பட்ட தாமதம் ஏற்படும் என எதிர்பார்க்கப்படுமாயின் உடனடியாக ஆரம்ப அறிக்கை ஒன்று அனுப்ப வேண்டி இருந்தமை குறிப்பிடப்பட்ட போதும் 2023 முதல் 2024 வரை 02 வருட கால எல்லையில் ரூபா 286,378 இற்கு உரிய 08 நட்ட சந்தர்ப்பங்களின் போது ஏற்பட்ட வாகன விபத்துக்கள் தொடர்பாக ஆரம்ப அறிக்கை தயாரிக்கும் கால தாமதம் 47 நாட்களுக்கும் 225 நாட்களுக்கும் இடையிலான கால வீச்சில் காணப்பட்டது. | ஆரம்ப அறிக்கை தாமதம் இன்றி தயாரிக்குமாறு உரிய உத்தியோகத்தர்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | ஆரம்ப அறிக்கை தாமதம் இன்றி தயாரித்து சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |
| (இ) | நிதிப்பிரமாணம் 104 (4) இன் பிரகாரம் ஏதாவது நட்டம் ஒன்று அல்லது இழப்பு ஒன்று ஏற்பட்டு 03 மாத காலத்திற்குள் முழுமையான அறிக்கை வழங்க வேண்டியிருந்த போதிலும் நிறுவனத்தால் அவ்வாறு நடவடிக்கை எடுக்காத 18 சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டதுடன் இறுதி | இறுதி அறிக்கை வழங்குதலை விரைவாக மேற்கொள்ளுமாறு பதவி நிலை உத்தியோகத்தர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. | இறுதி அறிக்கை தாமதம் இன்றி தயாரித்து சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |

அறிக்கை வழங்காமையினான கால தாமதம் 04 மாதங்களுக்கும் 64 மாதங்களுக்கும் இடையிலான வீச்சில் காணப்பட்டது.

## 4.2 முகாமைத்துவ செயற்திறனின்மை

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | திணைக்களத்தில் இருந்து மரணமடைந்த, ஓய்வு பெற்றச் சென்ற, வேலை நீக்கம் செய்யப்பட்ட சேவை முடிவுறுத்தப்பட்ட, சேவையில் இருந்து விலகிச் சென்ற, சேவையில் இருந்து அகற்றப்பட்ட 32 உத்தியோகத்தர்களிடம் இருந்து மீளாய்வாண்டின் இறுதி வரையில் ரூபா 2.086 கடன் மீதி அறவிட வேண்டி இருந்தது. | கடன் மீதியை அறவிடுவதற்கும், தீர்த்து வைப்பதற்கும் தற்போது நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | கடன் மீதியை அறவிடுவதற்கும் தீர்த்து வைப்பதற்கும் விரைவாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | காலி தொழில்நுட்பவியல் கல்லூாயில் 2019 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது பாடநெறிகளுக்காக கிடைத்த விண்ணப்பங்களின் எண்ணிக்கை 2023 ஆம் ஆண்டின் போது 56 சதவீதத்தால் குறைவடைந்து இருந்ததுடன் சேர்க்கப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கையும் 2019 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 2023 ஆம் ஆண்டில் 45 சதவீதத்தால் குறைவடைந்து இருந்தது. | 2021, 2022 ஆம் ஆண்டுகளின் போது பொருளாதார நெருக்கடியான நிலமைகளுக்கு முகம் கொடுத்தமையின் காரணமாக மாணவர்கள் தமது பாடநெறிகளை விட்டுச் சென்று வேலை வாய்ப்புக்குச் சென்றதன் காரணத்தினாலும் பாடநெறியை விட்டுச் சென்ற சதவீதம் உயர் பெறுமதியில் காணப்பட்டது. | பாடநெறிகளுக்காக மாணவர்களை கவருவதற்காக உரிய வேலைத் திட்டம் ஒன்று சரியான வேலைத் திட்டம் ஒன்று அமுல்படுத்தப்படல் வேண்டும். |
| (இ) | காலி, இரத்தினபுரி, பண்டாரவளை தொழில்நுட்பவியல் கல்லூரிகளுக்குரிய 2023 கல்வி ஆண்டின் போது நடாத்தப்பட்ட பரீட்சைகள் மற்றும் பெறுபேறுகளை விநியோகித்தல் பரிசோதனையின் போது 68 சந்தர்ப்பங்களின் போது பெறுபேறுகள் விநியோகிப்பதற்காக 03 மாதங்களுக்கும் 13 மாதங்களுக்கும் இடையிலான காலம் எடுத்திருந்தது. | விடைப் பத்திரங்களை மதிப்பிடும் நடவடிக்கைகளுக்காக ரூபா 30/40 போன்ற குறைந்த பெறுமதி செலுத்துதல், பொருளாதார நெருக்கடி போன்ற காரணங்களினால் பரீட்சை நடாத்துதல் தாமதம் அடைந்திருந்தது. | பெறுபேறுகள் தாமதம் அடைந்ததன் அடிப்படையில் மாணவர்களுக்கு நியாயமற்ற நிலமை ஒன்று ஏற்படுகின்றதைக் கவனத்தில் கொண்டு பரீட்சை பெறுபேறுகளை விநியோகித்தலை துரிதப்படுத்துதல் வேண்டும். |